**செய்தி வெளியீடு எண்: 767** **நாள்: 07.11.2019**

## செய்தி வெளியீடு

தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(8.11.2019) காலை 9.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 8ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இத்தாலியில் உள்ள காஸ்டிகிளியோன் என்ற ஊரில் கண்டல்போ பெஸ்கி– எலிசபெத் தம்பதியருக்கு மகனாக கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi) அவர்கள் 1680ஆம் ஆண்டு பிறந்தார். 1698ஆம் ஆண்டு பெஸ்கி அவர்கள் இயேசு சபையில் சேர்ந்தார். இவர் லத்தீன், பிரெஞ்சு, கிரீக் மொழிகளை கற்று அதில் நல்ல புலமை பெற்றார். பெஸ்கி அவர்கள், தர்க்க, வேதசாஸ்த்திரங்களை கற்றுத் தேர்ந்த பின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1710ஆம் ஆண்டு, பெஸ்கி அவர்கள் தனது தலைமையிடம் வேண்டியபடி, லிஸ்பனுக்குச் சென்றார். அங்கிருந்து கப்பல் மூலமாக கோவா சென்றார். பின்னர், பெஸ்கி அவர்கள் கோவாவிலிருந்து அம்பலக்காடு யேசு சபைக் குருமடம் சென்றடைந்து, அங்கிருந்து புறப்பட்டு தூத்துக்குடி வழியாக, மதுரை மாவட்டத்திலுள்ள காமநாயக்கன்பட்டியை அடைந்தார். 1713ஆம் ஆண்டு தஞ்சை பகுதிக்குச் சென்ற பெஸ்கி அவர்கள், அங்கிருந்து திருநெல்வேலிக்குச்

சென்றார். வடக்கன்குளம், கயத்தாறு பகுதியில் ஞானப்பணி ஆற்றி வந்த பெஸ்கி அவர்கள் தமிழை பிழையறக் கற்றார். அங்கு இருந்துகொண்டே இலக்கிய, இலக்கண நூல்களை எழுதத் தொடங்கினார். கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி அவர்களின் பணிகளை வியந்து, மக்கள் வீரமாமுனிவர் என்று அவரை அன்புடன் அழைத்தனர்.

1726ஆம் ஆண்டு, தேம்பாவணி எனும் தீந்தமிழ்க் காப்பியத்தை இயற்றிய வீரமாமுனிவர் அவர்கள், 1730ஆம் ஆண்டு, திருக்குறளில் அறம், பொருள், இரண்டையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். எண்ணற்ற பல நூல்களைப் படைத்த வீரமாமுனிவர் அவர்கள், தமிழ்– இலத்தீன், தமிழ்– பிரெஞ்சு, தமிழ்– ஆங்கிலம், போர்ச்சுகல்– தமிழ்– இலத்தீன் அகராதிகளையும் படைத்தார். இவர் ஏலாக்குறிச்சியில் அடைக்கல மாதா ஆலயம் ஒன்றைக் கட்டினார்.

மேலை நாட்டில் பிறந்து தமிழகத்தில் பணியாற்றிய இறையடியார்கள் பலருண்டு. அவர்களில் சமயப்பணியும், சமூகப்பணியும் மட்டுமன்றி தமிழ்ப்பணியும் ஆற்றிய தனிச் சிறப்புக்குரியவர் வீரமாமுனிவர் அவர்கள் ஆவார். அருந்தமிழ்ச் செல்வரான வீரமாமுனிவர் அவர்கள் 1747ஆம் ஆண்டு பிப்ரவரி நான்காம் நாள் இயற்கை எய்தினார்.

தமிழக அரசின் சார்பில், வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(8.11.2019) காலை 9.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

அயல்நாட்டவராகப் பிறந்து நம் அன்னைத் தமிழ்மொழியில் சிறந்த அகராதிகளைப் படைத்து தமிழ்த் தொண்டாற்றிய வீரமாமுனிவர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அன்னாரின் பிறந்தநாளான நவம்பர் 8ஆம் நாள் இந்த ஆண்டு முதல் ‘தமிழ் அகராதியியல் நாளாக’ ஆண்டுதோறும் கொண்டாடிட தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில், சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரி கலையரங்கில், 8.11.2019 அன்று காலை 9.30 மணியளவில் ‘தமிழ் அகராதியியல் நாள்’ துவக்க

விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். மேலும், ‘‘சொற்குவை’’ ஆய்வரங்கம் நடைபெற உள்ளது. இந்த ஆய்வரங்கில் பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**